**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 2/2020**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மருத்துவர்.V. செந்தில் குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு.C. விஸ்வநாதன்** | **Calling** | : | **உதவி உறைவிட மருத்துவர்** |
| **Village** | : | **அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **51** |
| | | | **Dated** | : | **13.03.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**A6, A7 present. A1, 2, 3, 5 absent, petition filed and allowed. A4 died (CA). Both side counsels present.**

அ.சா. 10 (பட்டியல் சாட்சி 11 ), **மருத்துவர்.V. செந்தில் குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது திண்டுக்கல், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி உறைவிட மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 11.11.2013 ம் தேதி மேற்படி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்த போது இரவு 09.55 மணிக்கு பால்பாண்டி, த/பெ. வெள்ளைச்சாமி என்பவரை, அவரது மாப்பிள்ளை என்று அவர் குறிப்பிட்ட விஷ்னு என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் அன்றைய தினமே இரவு 09.30 மணிக்கு அவரது வீட்டின் அருகே குச்சி கொண்டு தாக்கியதாக கூறினார். அவரை

பரிசோதித்ததில் அவருக்கு 3x1x1 cm அளவில் சிதைந்த காயம் அவரது பின் தலையில் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக சேர்த்து சிகிச்சை அளித்தேன். அன்றைய தினமே 10.30 மணிக்கு மருத்துவரின் அனுமதி இல்லாமல் வெளியில் சென்று விட்டதாக குறிப்பு உள்ளது. அவருக்கு நான் காயச்சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

சிகிச்சைக்கு வந்த மேற்படி நபர் அவரை தாக்கியவர்களின் பெயர் மற்றும் முகவரியை சொல்லவில்லை.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.03.13 18:21:49 +0530